

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் ரூபாய் 9 கோடியில் புதிய பேருந்து நிலையம் துவக்க விழா நிகழ்வில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று புதிய பேருந்து நிலையத்தினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.உடன் மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல் கிஷோர், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார்,முன்னாள் அமைச்சர் ச.தங்கவேலு,நகர்மன்ற தலைவர் உமா மகேஸ்வரி சரவணன்,ஒன்றிய குழு தலைவர் லாலா சங்கர பாண்டியன்,நகர செயலாளர் பிரகாஷ், நெல்லை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் விஜயலட்சுமி உள்பட அரசு அலுவலர்கள்,கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி சாக்கோட்டை ஒன்றியம் நெற்புக பட்டியில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் தொகுதி மேம்பாட்டுநிதியிலிருந்து கட்டப்பட்ட நாடக மேடையினை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் இந்த நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே .எஸ். ரவி, மாவட்ட மகளிர் அணி தலைவி மணிமேகலை முத்துச்சாமி, ஒன்றிய செயலாளர் கே. எஸ். ஆனந்த், முருகப்பன் மற்றும் கிராம மக்கள் கலந்து கொண்டார்கள்.

### தமிழக வரலாற்றில் எந்த முதல்வரும் செய்யாத

# சாதனை திட்டங்களை நான்கு ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்துள்ளார்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதம்



திண்டுக்கல், மே 14-

தமிழக வரலாற்றில் எந்த முதல்வரும் செய்யாத சாதனை திட்டங்களை நான்கு ஆண்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி உள்ளார் என்று ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் டி.புதுப்பட்டியில் நடைபெற்ற நாடுபோற்றும் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு தமிழக முதல்வரின் நான்கு ஆண்டு சாதனை 50 வருடங்களுக்கு தமிழக மக்கள் மனதில் நிலைத்திருக்கும் என்றார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கன்னிவாடி அருகே உள்ள டி.புதுப்பட்டியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும், பகுத்தறிவாளரும், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுரு சாமி தலைமை தாங்கினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், இரா.தண்டபாணி, கன்னிவாடி பேரூர் கழக செயலாளர்கள் இளங்கோவன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் வழக்கறிஞர் சண்முகம், டி.புதுப்பட்டி கிளை செயலாளர் வ.உதயகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கரூர் மதி என்ற மதிவாணன், வா.ராஜேஸ்வரி ஆகியோர் பேசிய பின்பு நிறைவாக தலைமை உரை ஆற்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளருமான ஐ.பெரியசாமி பேசும் போது :-

தமிழ்நாட்டில் இதுவரை ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1000 வழங்கப்பட்டு வருகிறது. விடுபட்டவர்களுக்கு விரைவில் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். அதற்கான சிறப்பு முகாம் ஜூன் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும். அனைத்து கிராமங்களிலும் குடி தண்ணீர், சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தில் 20 ஆயிரம் கிலோ மீட்டருக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆத்தூர் ஒன்றியத்தில் கிராமப்புற மாணவ மாணவிகள் எதிர்கால நலன் கருதி, ரூபாய் 75 கோடி மதிப்பில் அரசு கூட்டுறவு கலை கல்லூரி சீவல்சரகு அருகே அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில், 196 குடிநீர் மேல் நிலைத் தொட்டிகள் கட்டப் பட்டுள்ளது. புதிதாக மேலும் 1200 குடிநீர் மேல் நிலைத் தொட்டிகள் கட்டப்பட உள்ளது. கடந்த திமுக ஆட்சியில் வழங்கப்பட்ட முதியோர் உதவித் தொகை நிறுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் முதல் கட்டமாக ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக மேலும் ஒரு லட்சம் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆத்தூர் ஒன்றியத்தில் மட்டும் 1500 வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே சிறப்பாக செயல்படும் முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் 8 ஆண்டுகளில் 8 லட்சம் கலைஞர் கனவு இல்ல வீடுகள் கட்ட திட்ட மிட்டுள்ளார்.

ஒரு ரூபாய் செலவில்லாமல் கூட்டுறவுத்துறை, சத்துணவு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அரசு வேலை வழங்கப்பட்டு வருகிறது. தமிழக வரலாற்றில் எந்த முதல்வரும் நாங்கள் வணங்கக்கூடிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கூட செயல்படுத்திய சாதனை திட்டங்களை விட நம் முதல்வர் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நான்கு ஆண்டுகள் செயல்படுத்தி உள்ளார்.

அவரின் சாதனைகள் இன்னும் 50 ஆண்டுகள்; தமிழக மக்கள் மனதில் நிலைத்திருக்கும் என்றதோடு வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்பார் என்றார்.

கூட்டத்தில் பொறியாளர் அணியைச் சேர்ந்த எம்.செந்தில்குமரன், ஒன்றிய துணைச் செயலாளர் பிரபாகரன் பொருளாளர் திருப்பதி, விவசாய அணி அமைப்பாளர் கே.ராமமூர்த்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.பார்த்தசாரதி, துணை அமைப்பாளர் ஜே.அருண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ராஜேஸ் பெருமாள் கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஆரோக்கிய சுதா செல்வி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் புதுச்சத்திரம் மெர்சி, ராதாதேவி சாமிநாதன், உட்பட பலர் கலந்து கொண்டனர். நிறைவாக ரெட்டியார்சத்திரம் நில வள வங்கி முன்னாள் மேலாளர் சக்கரவர்த்தி மணிமாறன் நன்றி கூறினார்.



சிவகங்கை மாவட்டம் கோட்டையூர் மேற்கு ஒன்றியம் மணச்சையில் தமிழக முதல்வரின் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் அது பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் கேஆர்..பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார். உடன் பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ஆனந்த், கழக பேச்சாளர்கள் ராமகிருஸ்ணன்,நெல்லை ஜான் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் உடன்குடி பஜாரில் நீர் மோர் பந்தலை துவக்கி வைத்தார் மீன் வளம்–மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதா கிருஷ்ணன் உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ. ராமஜெயம்,உடன்குடி ஒன்றிய செயலாளர் இளங்கோ, உடன்குடி பாலசிங் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் குரும்பூர் ஒன்றியம் தென்திருப்பேரை பேரூராட்சி மன்ற புதிய அலுவலக கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார் மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், உடன் வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், ஒன்றிய செயலாளர்கள் குரும்பூர் நவின்குமார் ஆத்தூர் ரமேஷ், ஆழ்வை சேர்மன் ஜனகர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியம் பேரூர் கழகத்தின் சார்பில் புறவழிச் சாலையில் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் நாடு போற்றும் பல்லாண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொது கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார் மேடையில் முன்னாள் எம்.எல்.ஏ சுப.மதியரசன், பேரூர் கழக செயலாளர் பி.ஏ.நஜ்மூதீன், பொதுக்குழு உறுப்பினர் த. உதயகுமார், தலைமைக் கழக பேச்சாளர்கள் சிங்காரவேலன் நவீன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.




திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் திண்டுக்கல் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் நாடு போற்றும் நான்காண்டு கழகத்தின்சாதனை விளக்கப் பொதுக் கட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பொன்.முத்துராமலிங்கம் சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் வெள்ளிமலை வரவேற்பு உரையாற்றினார்.உடன் கிழக்கு மாவட்ட அவை தலைவர் காமாட்சி, துணைச் செயலாளர் பிலால் உசேன், நிர்வாகிகள் கே.எஸ்.அக்பர், இல்.கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




விருதுநகரில் வடக்கு மாவட்டம் சார்பில் தி.மு.க. அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் விருதுநகர் நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ். மாதவன் தலைமையில் நடைபெற்றது .விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் கலந்து கொண்டு பேசினார். உடன் எட்டயபுரம் தமிழ் பிரியன், நகர திமுக செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, இளைஞர் அணி கிருஷ்ணகுமார், வழக்கறிஞர் அசோக், இலக்கிய அணி மலைராஜன், பாரத், மின்கழகம் அண்ணாதுரை, ராம்கோ சௌந்தரராஜன், ஆர்.பழனிச்சாமி, பொதுக் குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், சுதாகர், போக்குவரத்து கழகம் பொதுச் செயலாளர் ராஜ செல்வம், நேஷனல் ராமர், ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், எல்.திருமாறன், அ.மரியராசு, ஆகியோர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக இராஜபாளையம் தொகுதியைச் சார்ந்த 161 மாற்றுத்திறனாளிகளுக்கு இராஜ பாளையம் ஆனந்த் கார்டனில் மாவட்ட ஆட்சியர் வி.பி.ஜெயசீலன்., ஐ.ஏ.எஸ். ராணி ஸ்ரீகுமார். எம்.பி. இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன். எம்.எல்.ஏ வழங்கினார்கள். இந்நிகழ்வில் வட்டாட்சியர் வடிவேல் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி மணி கண்டராஜா சேத்தூர் சேர்மன் பாலசுப்ரமணியன் கவுன்சிலர்கள் செந்தில்குமார் ரோகினிநாகேஷ்வரன் மாற்றுத்திறனாளிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி தெற்கு மாவட்டம் சார்பில் இளைஞர் அணி ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் செஞ்சுரி செல்வம் வரவேற்புரை ஆற்றினார். இளைஞர் அணி துணை அமைப்பாளர் பிரபாகரன் தொகுப்புரையாற்றினார். தேனி தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். மகாராஜன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக மாநில இளைஞரணி துணை அமைப்பாளர் ஜி.பி.ராஜா.சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ் ஆனந்த். ஊடகவியலாளர் இந்திரகுமார் தேரடி ஆகியோர் கலந்து கொண்டு புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு பயிற்சி அளித்தனர். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் பேரூர் செயலாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.